**செ.வெ.எண்: 658** **நாள்: 11.11.2020**

**செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்கள் பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்கள் பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கிவரும் செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்கள் மற்றும் நாய் இனங்களை இனப்பெருக்கம் செய்து விற்பனை செய்யும் நிலையங்களை பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்திட வேண்டும். அதன்பின்னரே செயல்பட அனுமதிக்கப்படும். எனவே விண்ணப்ப படிவத்தினை https://www.tn.gov.in என்ற இணைய தளத்தில் Animal Husbandry Department தளத்தில் Rules and Regulations உட்பிரிவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பொது அறிவிப்பு செய்த தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன், திரும்பப் பெற இயலாத ரூ.5000க்கான வங்கி வரைவோலையினை Member Secretary, Tamil Nadu Animal Welfare Board என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் எடுத்து தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம் இயக்குநர் அலுவலகம், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், 571 அண்ணாசாலை, கால்நடை மருத்துவமனை வளாகம், நந்தனம், சென்னை-35 என்ற முகவரிக்கு மேற்காணும் நிலைய உரிமையாளர்கள் விண்ணப்பங்களை அனுப்பி தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**